[2003 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ஏறத்தாழ 71 ஆயிரம் சத்துணவு மையங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இவை அனைத்திற்கும் அரசு சார்பிலே கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றனவா? அப்படி இல்லையென்றால் எத்தனை சத்துணவுக் கூடங்கள் அரசுக் கட்டடங்களிலே இயங்குகின்றன? எத்தனை இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மையங்களுமே அரசினுடைய கட்டுப்பாட்டிலே இயங்குகிற கட்டடங்களிலேதான் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அங்கன்வாடி மையங்களைக்கூட தனியாகக் கட்டித் தருவதற்கு உலக வங்கியின் மூலம் நிதியுதவி பெற்று அந்தப் பணிகளும் அந்தந்தப் பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலம் கட்டப்படக்கூடிய, பழுது நீக்கப் பணிகளை அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், பெற்றோர்—ஆசிரியர் கழகத்திலே இடம் பெற்று இருப்பவர்கள், பொது மக்களைப் பங்கேற்கச் செய்து, அதன் மூலம் அவர்களாகவே, காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சமைக்கின்ற சமையல் கூடங்கள் பெரும்பாலான இடங்களில் மரத்தடியிலேயும், வெட்ட வெளியிலேயுமாக இருந்து, அங்கு உணவு சமைக்கப்படுகின்றது. ஆகவே, அங்கே சமையல் கூடங்களை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமையல் கூடம் என்று ஒன்று கட்டித்

2003 ஏப்ரல் 30]

தரப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே பழுது நீக்கம் செய்யவேண்டி இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் வெளியிலே வந்து சமைத்துக் கொண்டிருப்பதாகப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தெரிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த சத்துணவு சமையல் கூடத்தையும் சரி செய்வதற்காகத்தான், இதுபோன்ற நிதி ஒதுக்கீடு செய்து, அதையும் சரி செய்து தரவேண்டுமென்று நாங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு இங்கேயிருந்து தாக்கீது அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் பழுது நீக்கம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சத்துணவுக் கூடங்கள் பழுது நீக்கம் செய்யப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படியென்றால், பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிலுகிற அந்த நிலையிலே, பழுதுபட்ட நிலை இருந்தால் அதைக் கவலைக்குரிய ஒன்றாக நான் கருதுகிறேன். ஆகவே, சத்துணவுத் துறைக்கு என்று ஏகப்பட்ட நிதிகளை ஒதுக்கி, அதைக் கண்காணித்து வருவது பாராட்டுக்குரிய ஒன்று, அதே அடிப்படையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதி என்ற முறையில், சத்துணவுக் கூடங்களைப் பழுது நீக்கம் செய்வதற்கான வகையில் மாநில அளவிலேயே கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பல்வேறு இடங்களில் இதுபோன்ற குறைபாடுகள் இருப்பது பற்றி வரும் நிதியாண்டிலே கண்டறியப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1991-96 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற சத்துணவுக் கூடங்களை, தொழில் முனைவோரிடத்திலேயும், அதைப்போலத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடத்திலேயும் தத்துக் கொடுத்து அவற்றைச் சீராக்கிக்

கொண்டிருந்தார்கள். அதைப்போல, இப்போது ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், தொழில் முனைவோரையும் அழைத்து, இதுபோன்ற பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைக் கொடுத்து சரி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அரசின் திட்டமாகவே செயல்படுத்த வேண்டுமென்று கொண்டு வரப்பட்டது இந்தத் திட்டம். அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, 659 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து, மிகச் சிறப்பான பணியை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது குழந்தைகள் சம்பந்தப்பட்ட, சத்துணவு சாப்பிடுகின்ற பிரச்சினை என்கிற காரணத்தால், பழுது நீக்கக்கூடிய பணியை ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவர்களோ அல்லது பெற்றோர்—ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்களோ முன்வந்து செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கம் அவர்களைத் தனியாக வற்புறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 364, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

364—

பேருந்துகள் இயக்குதல்

***9747—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் முதல் தத்தைமஞ்சி வரை புதியதாக இரண்டு பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2003 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை-பழவேற்காடு (வழி) மீஞ்சூர், தத்தைமஞ்சி காட்டூர் பிரதான வழித்தடத்தில், காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம், பொது மக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால், 'மீஞ்சூர்-தத்தைமஞ்சி' எனக் கூடுதலாகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியத்தைச் சார்ந்த பொது மக்கள் நீண்ட நாட்களாக காரனோடை பஸ் நிறுத்துமிடத்திலிருந்து ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை தடம் எண் 114-ஏ, 57எஃப்-ஐ நீட்டித்தர வேண்டுமென்று கோரி வந்தார்கள். மேற்காணும் கோரிக்கையை ஏற்று, இரண்டு பஸ் தடங்களையும் ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை கடந்த வாரம் நீட்டித்துத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பஸ் நிலையத்திலிருந்து தத்தைமஞ்சி வரை, தடம் எண் 27, ஒரே பஸ் ஒரு நாளைக்கு காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகள் இயக்கப்படுகின்றது. ஆனால் மீஞ்சூர்-தத்தைமஞ்சி தடங்களின் இடைப்பட்ட பகுதிகளில் நெய்தவாயில், வாயிலூர், திருவல்லிவாயில், தாத்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களான, திருபழவேற்காடு, கடப்பாக்கம், ரெட்டிப்பாளையம், குமாரஞ்சேரி, அபிராமமடம் போன்ற பகுதிகள் உள்ளன. மேற்காணும் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். நெருக்கடி நிறைந்த நேரங்களில் காலை, மாலைகளில் பள்ளி மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் பயணம் செய்கிறார்கள். தேவையான பஸ் தடங்கள் இல்லாததால் தனியார் பஸ், மேக்சி வேன், லாரி போன்றவற்றில் பயணம் செய்கிறார்கள். அதனால் அடிக்கடி விபத்துகள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லையென்ற பதிலை மறுபரிசீலனை செய்து மேற்காணும் நிலையைப் போக்க, பகுதி மக்கள் கோரிக்கையை